[1992 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தக் கேள்விக்கு என்னிடம் விடை இல்லை. தனிக் கேள்வி போட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் தெரிவிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

649—

சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றல்.

*4060 திரு. இராம. இராமநாதன் ;

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) கும்பகோணம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட சார்பதிவாளர் அலுவலகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கும்பகோணம் சார்பதிவாளர் அலுவலகத்தை மாவட்ட பதிவகமாக மாற்றக்கோரும் செயற்குறிப்பு, பதிவுத் துறைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்பு மீது அரசின் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு முடிவெடுக்கப் படும்.

580—

குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி

*5184—திரு. பி. வி. இராஜேந்திரன் ;

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் தெருவிளக்கு விஸ்தரிப்பு வசதி கோரி ஊராட்சி தீர்மானித்து அதற்கான காப்புத்தொகை ஒன்றியம் வாயிலாக செலுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகளாகியும் இதுவரை மின்விளக்கு விஸ்தரிப்பு வசதி வழங்கப்படாத நிலையில் உள்ளதை தவிர்த்து பணி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடை—

வேதாரண்யம் தொகுதி குரவபுலம் ஊராட்சிப் பகுதியில் 80 தெரு விளக்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு காப்புத் தொகையாக ரூ. 1,600 செலுத்தப்பட்டுள்ளது. அரசின் தெரு விளக்குகளுக்கான சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு (1991-92) இதற்கு மின் இணைப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) விடைகள் பெறப்பட்டுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு அவையில் வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 51-ன்படி இதுவரை துறைகளிடமிருந்து வரப் பெற்று அவையில் விடையளிக்காமல் நிலுவையில் உள்ள 975 உடுக்குறியிட்ட வினாக்களுக்கான விடைகள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டு — (குறுக்கீடு) கேள்வி நேரமே முடியவில்லை-அவை முன் வைக்கப்பட்டுள்ளன அவ்வாறு மாற்றப் பட்டுள்ள உடுக்குறியிட்ட வினாக்களின் எண், அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்கள் பெயர், சம்பந்தப்பட்ட துறைகளுடைய அமைச்சர்களின் பெயர்கள் குறிப்பிட்ட பட்டியல் மேசைமீது வைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் அடங்கியுள்ள வினாக்களுக் கான விடைகள் பட்டியல் உறுப்பினர்களின் பார்வைக்காக சட்ட மன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1—

வரப்பாளையம் காவலர்களுக்கு குடியிருப்பு.

வினா எண் 283—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், வரப்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்புக் கட்டித்தர அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

பெரியார் மாவட்டம், வரப்பாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு குடியிருப்பு கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.